*ஜூன் 1, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தைகளே, நீங்கள் இப்போது உங்கள் வீட்டை நினைவு செய்கின்றீர்களா? ஒரு குறுகிய காலத்திற்கு இந்த பழைய உலகிற்கு சங்கமயுகத்து பிராமண குழந்தைகளாகிய நீங்கள் விருந்தினர்கள் என்பது உங்களுக்கு மட்டும் தான் தெரியும். உங்கள் உண்மையான வீடு அமைதி தாமம் ஆகும். நீங்கள் வீட்டிற்கு திரும்புவதற்கு முன் சிறிது நேரமே இருக்கின்றது என்று உங்களுக்கு தெரியும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் சிறிது நேரத்திற்கு ஓர் விருந்தினர் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன். நான் சேவையின் பொருட்டு, இந்த உலகிற்கு ஒரு விருந்தினர் ஆவேன், எதுவும் எனக்கு சொந்தமில்லை. என்னுடைய உண்மையான வீடு ஆத்ம உலகமாகும். நான் வீடு திரும்புவதற்கு முன் சிறிது நேரமே இருக்கின்றது!

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: உன்னை மாயா ஒரு வழியிலும் கடவுள் வேறு வழியிலும் திருப்புகிறார்கள். நீ தந்தையை நினைவு செய்யும் போது, மாயை உனக்கு வேறு பல புயல்களை கொண்டுவருகின்றாள். மாயாவின் உத்தரவு: சக்தி வாய்ந்தவளாகி சக்தி வாய்ந்தவர்களோடு போராடு என்பதாகும். நீங்கள் அனைவரும் போர்க்களத்தில் உள்ளீர்கள். எந்த வகையான வீரர்கள் இருக்கின்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். சிலர் மிகவும் பலவீனமாகவும் சிலர் சற்று பலவீனமாகவும் மற்றும் பலர் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். அனைவரும் மறைமுகமான வழியில் இரகசியமாக மாயாவுடன் போராடுகின்றீர்கள். உங்கள் எதிரி மாயா என்பது உங்களுக்கு தெரியும்.

நான் ஒரு மஹாவீர் என்ற மனோபாவத்தை ஏற்றுக்கொள்கின்றேன். என்னுடைய எதிரி சொந்தமாக என்னை நான் ஏமாற்றிகொள்வதும் போலித்தனமானவையும் ஆகும், மற்றொரு நபர் அல்ல. ஒரு மஹாவீராக, நாடகத்தில் என்ன நடந்தாலும் அது நல்லது என்று நினைக்கிறேன். அவை அனைத்தும் என்னை என் வெற்றிக்கு அழைத்து செல்கிறது. கடவுள் என் இதயத்தில் இருக்கின்றார். அதனால் உண்மையான போரில் போராட எனக்கு தைரியம் இருக்கிறது. ஒரு மஹாவீரரின் மனோபாவத்தோடு, நான் மாயையை வெற்றிக் கொள்கின்றேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: நீ தந்தையை போலவே பல ரூபங்கள் உள்ளவராக, கடவுளுடனான உன்னுடைய சந்திப்பில் இதயபூர்வமான உரையாடலுக்கு ஒரு தெளிவான பதில் பெறுவாய்யாக.

இன்று என்னுடைய திருஷ்டியில் பாபாவின் பல ரூபங்களை நான் வைத்திருக்கிறேன். பாபாவை நான் உடனடியாக பார்க்கின்றேன், நிராகாரமானவரிடமிருந்து ஒரு சுட்சுமமான உடையை எடுத்துக் கொள்கின்றேன். தொடர்ந்து பாபாவை வைத்திருப்பது என்னை களிமண் (உடல் உணர்வு) ஆடையை

விட்டுவிட உதவுகின்றது. மேலும் என்னுடைய தேவதை ஆடையை மேற்கொள்ள உதவுகின்றது. இந்த தேவதை ஆடை மாயை புகமுடியாதாக இருக்கின்றது அதனால் நான் பாபாவிடம் என் இதயபூர்வமான உரையாடலிற்கு தெளிவாக பதில் பெறுகின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*